www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

அரையாண்டுத் தேர்வு டிசம்பர் 2024

வகுப்பு :12

கணக்குப்பதிவியல்

நேரம் : 3.00 மணி

மதிப்பெண்கள் : 90

தேர்வு எண்:

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக: (20 x 1=20)

1. பொறுப்புகளைக் காட்டிலும் மிகுதியாக உள்ள சொத்துகள்
(அ) நட்டம் (ஆ) ரொக்கம் (இ) முதல் (ஈ) இலாபம்

2. இறுதி நிலை அறிக்கை வழக்கமாக தயாரிக்கப்படுவது
(அ) தொடக்க முதல் கண்டறிய (ஆ) இறுதி முதல் கண்டறிய
(இ) அவ்வாண்டின் இலாபம் கண்டறிய (ஈ) அவ்வாண்டின் நட்டம் கண்டறிய

3. உயில்கொடை ஒரு
(அ) வருவாயினச் செலவு (ஆ) முதலினச் செலவு (இ) வருவாயின வரவு (ஈ) முதலின வரவு

4. பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கின் இருப்பு காட்டுவது
(அ) அந்த ஆண்டில் ஏற்பட்ட நட்டம்
(ஆ) அந்த ஆண்டின் செலவுகளைக் காட்டிலும் மிகுதியான வருமானம்
(இ) அந்த ஆண்டின் மொத்த ரொக்கச் செலுத்தல்கள் (ஈ) அந்நாளைய ரொக்கம் மற்றும் வங்கி இருப்பு

5. எடுப்பு மீது வட்டி, முதல் மீது வட்டி மற்றும் ஊதியம் கழித்தபின் உள்ள இலாபம் ரூ.10,500. கீதா என்ற கூட்டாளி கழிவுக்குப் பின் உள்ள நிகர இலாபத்தில் 5% கழிவு பெற உரியவராயின் கழிவுத் தொகையை கண்டறியவும். (அ) ரூ.50 (ஆ) ரூ.150 (இ) ரூ.550 (ஈ) ரூ.500

6. பின்வருவனவற்றில் எது இலாபநட்டப் பகிர்வு கணக்கில் காட்டப்படும்
(அ) அலுவலகச் செலவுகள் (ஆ) பணியாளர் ஊதியம்
(இ) கூட்டாளியின் ஊதியம் (ஈ) வங்கிக்கடன் மீதான வட்டி

7. உயர் இலாபம் பின்வரும் இரண்டிற்கும் இடையேயான வேறுபாடாகும்
(அ) பயன்படுத்தப்பட்ட முதல் மற்றும் சராசரி இலாபம் (ஆ) சொத்துகள் மற்றும் பொறுப்புகள்
(இ) சராசரி இலாபம் மற்றும் சாதாரண இலாபம் (ஈ) நடப்பு ஆண்டின் இலாபம் மற்றும் சராசரி இலாபம்

8. சரியற்ற இணையினை அடையாளம் காணவும்
(அ) சராசரி இலாப முறையில் நற்பெயர் = சராசரி இலாபம் x கொள்முதல் ஆண்டுகளின் எண்ணிக்கை
(ஆ) உயர் இலாப முறையில் நற்பெயர் = உயர் இலாபம் x கொள்முதல் ஆண்டுகளின் எண்ணிக்கை
(இ) ஆண்டுத்தொகை முறையில் நற்பெயர் = சராசரி இலாபம் x ஆண்டுத்தொகை காரணியின் தற்போதைய மதிப்பு
(ஈ) கூட்டு சராசரி இலாப முறையில் நற்பெயர் = கூட்டு சராசரி இலாபம் x கொள்முதல் ஆண்டுகளின் எண்ணிக்கை

9. கூட்டாளி சேர்ப்பின் போது சொத்துகள் மற்றும் பொறுப்புகளை மறுமதிப்பீடு செய்யும்போது ஏற்படும் இலாபம் அல்லது நட்டம் யாருடைய முதல் கணக்கிற்கு மாற்றப்படுகிறது?
(அ) பழைய கூட்டாளிகள் (ஆ) புதிய கூட்டாளி
(இ) அனைத்து கூட்டாளிகள் (ஈ) தியாகம் செய்த கூட்டாளிகள்

10. பொருந்தாத ஒன்றை தேர்ந்தெடுக்கவும்
(அ) மறுமதிப்பீட்டு இலாபம் (ஆ) பகிர்ந்தளிக்கப்படாத இலாபம்
(இ) புதிய கூட்டாளி கொண்டு வந்த நற்பெயர் (ஈ) முதலீட்டு மாறுபடும் நிதி

11. கூட்டாளி விலகலின் போது பொதுக்காப்பு மாற்றப்படுவது
(அ) அனைத்து கூட்டாளிகளின் முதல் கணக்கிற்கு (ஆ) மறுமதிப்பீட்டுக்கணக்கிற்கு
(இ) தொடரும் கூட்டாளிகளின் முதல் கணக்கிற்கு (ஈ) நினைவுக்குறிப்பு மறுமதிப்பீட்டு கணக்கிற்கு

12. X, Y மற்றும் Z என்ற கூட்டாளிகள் இலாப நட்டங்களை சமமாகப் பகிர்ந்து வந்தனர். 2019, ஏப்ரல் 1 அன்று X இறந்து விட்டார். 2018 இல் இலாபம் ரூ.36,000 என்ற அடிப்படையில் 2019 ஆம் ஆண்டுக்குரிய இலாபத்தில் X ன் பங்கினைக் கண்டறியவும்.
(அ) ரூ.1,000 (ஆ) ரூ.3,000 (இ) ரூ.12,000 (ஈ) ரூ.36,000



Scanned with CamScanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

13. முன்னுரிமைப்பங்கு என்பது

(i) நிலையான விகிதத்தில் பங்காதாயம் பெறுவதற்கான முன்னுரிமையைப்பெற்றபங்கு

(ii) கலைப்பின்போது பங்கு முதலைதிரும்பப்பெறுவதற்கான முன்னுரிமையைப்பெற்றபங்கு

(அ) (i) மட்டும் சரியானது (ஆ) (ii) மட்டும் சரியானது

(இ) (i) மற்றும் (ii) சரியானது (ஈ) (i) மற்றும் (ii) தவறானவை

14. பின்வரும் வாக்கியங்களில் எது தவறானது?

(அ) வெளியிடப்பட்ட பங்குமுதல் அங்கீகரிக்கப்பட்ட பங்குமுதலை விட ஒருபோதும் அதிகமாக இருக்கக் கூடாது.

(ஆ) பங்குகள் குறைஒப்பமாக இருக்கும் நிலையில் வெளியிடப்பட்ட பங்குமுதல், ஒப்பிய பங்குமுதலை விடகுறைவாக இருக்கும்.

(இ) காப்பு முதல் நிறுமத்தைகலைக்கும்போது செலுத்துமாறு அழைப்பு விடுக்கப்படுகிறது.

(ஈ) செலுத்தப்பட்ட பங்குமுதல், அழைக்கப்பட்ட பங்கு முதலின் ஒரு பகுதி ஆகும்.

15. இருப்புநிலைக்குறிப்பு வணிக நிறுவனத்தின் நிதிநிலை பற்றிய தகவல்களை வழங்குகிறது.

(அ) ஒரு காலக்கட்டத்திற்கு மேலான (ஆ) ஒரு குறிப்பிட்ட நாளுக்குரிய

(இ) ஒரு குறிப்பிட்ட காலத்திற்கான (ஈ) குறிப்பிட்ட கணக்காண்டிற்குரிய

16. ஒரு பொது அளவு இருப்புநிலைக்குறிப்பில், நீண்டகாலச் சொத்துகளின் சதவீதம் 75 எனில், நடப்புச் சொத்துகளின் சதவீதம் எவ்வளவு? (அ) 175 (ஆ) 125 (இ) 25 (ஈ) 100

17. ஒரு இனம் மற்றொரு இனத்தோடு பெற்றிருக்கும் தொடர்பினை கணிதவியல்முறையில் கூறுவது

(அ) முடிவு (ஆ) விகிதம் (இ) மாதிரி (ஈ) தீர்மானம்

18. பின்வருவனவற்றில் சரியாகப் பொருந்தாதது எது?

(அ) நீர்மைவிகிதம் - விகிதாச்சாரம்

(ஆ) மொத்தஇலாப விகிதம் - சதவீதம்

(இ) நிலைச் சொத்துகள் சுழற்சி விகிதம் - சதவீதம்

(ஈ) புற அக பொறுப்புகள் விகிதம் - விகிதாச்சாரம்

19. Tally-ல் இருந்து வெளியேறுவதற்கு பயன்படுத்தும் சாவி(KEY) ---------

(அ) Ctrl + Z (ஆ) Ctrl + P (இ) Ctrl + Q (ஈ) Ctrl + X

20. F11 எனும் பயன்பாடு

(அ) நிறுவனப் பண்பு கூறுகள் (ஆ) கணக்கியல் சான்றாவணங்கள்

(இ) நிறுவன கட்டமைப்பு (ஈ) இவைகளில் எதுவும் இல்லை

II. எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும் (வினா 30 க்கு கட்டாயமாக விடையளிக்கவும்) (7 x 2=14)

21. பின்வரும் தகவல்களிலிருந்து இலாபம் அல்லது நட்டம் கண்டறியவும்.

| விவரம் | ரூ. |
|---|---|
| 2018, ஜனவரி 1 அன்று முதல் | 2,20,000 |
| 2018, டிசம்பர் 31 அன்று முதல் | 1,80,000 |
| அவ்வாண்டில் கொண்டுவந்த கூடுதல் முதல் | 40,000 |
| அவ்வாண்டில் எடுப்புகள் | 50,000 |

22. பின்வரும் விவரங்கள் தூத்துக்குடி இளம் முன்னோடிகள் சங்கத்தின் இறுதிக் கணக்குகளில் எவ்வாறு தோன்றும் எனக் காட்டவும். சங்கத்தில் 100 உறுப்பினர்கள் உள்ளனர். ஒவ்வொருவரும் ரூ. 25 ஆண்டுச் சந்தாவாக செலுத்துகின்றனர். ஆண்டிறுதியில் 10 உறுப்பினர்கள் சந்தா செலுத்தாமல் இருந்தனர். ஆனால் நான்கு உறுப்பினர்கள் அடுத்த ஆண்டிற்கான சந்தா தொகையை முன்கூட்டிச் செலுத்தி இருந்தனர்.



Scanned with CamScanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

23. பின்வரும் விவரங்களிலிருந்து கடந்த 4 ஆண்டுகள் சராசரி இலாபத்தில் 3 ஆண்டுகள் கொள்முதல் என்ற அடிப்படையில் நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும்.

| ஆண்டு | முடிவு | ரூ. |
|---|---|---|
| 2015 | இலாபம் | 5,000 |
| 2016 | இலாபம் | 8,000 |
| 2017 | நட்டம் | 3,000 |
| 2018 | இலாபம் | 6,000 |

24. அஞ்சலி மற்றும் நித்யா என்ற கூட்டாளிகள் இலாபநட்டங்களை 5:3 என்ற விகிதத்தில் பகிர்ந்து வருகின்றனர். அவர்கள் பிரமிளா என்பவரை 1.1.2018 அன்று கூட்டாளியாகச் சேர்த்தனர். அந்நாளில் அவர்களின் இருப்பு நிலைக் குறிப்பின் சொத்துகள் பக்கத்தில் பகிர்ந்து தரா நட்டம் ரூ40,000 ஆக இருந்தது. சேர்ப்பின் போது பகிர்ந்து தரா நட்டத்தைபகிர்வதற்கான குறிப்பேட்டுப் பதிவினைத்தரவும்.

25. சுரேஷ், செந்தாமரை மற்றும் இராஜ் ஆகியோர் ஒரு நிறுவனத்தின் இலாப நட்டங்களை 3:2:1 எனும் விகிதத்தில் பகிர்ந்து வந்தனர். சுரேஷ் என்பவர்அக்கூட்டாண்மையிலிருந்து விலகினார். அவர் விலகிய நாளில் நிறுவனத்தின் நற்பெயர் ரூ.36,000 என மதிப்பிடப்பட்டது. கூட்டாளிகளின் முதல் கணக்குகள் மாறுபடும் முதல் எனக் கொண்டு நற்பெயர்திவிற்கான தேவையான குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும்.

26. கீழ்க்கண்ட தகவல்களிலிருந்து விரைவு விகிதத்தைக் கணக்கிடவும்.

மொத்த நடப்புப் பொறுப்புகள் ரூ.2,40,000; மொத்த நடப்புச் சொத்துகள் ரூ4,50,000;
சரக்கிருப்பு: ரூ.70,000; முன்கூட்டிச் செலுத்திய செலவுகள்: ரூ.20000.

27. கூட்டாண்மை ஒப்பாவணம் என்றால் என்ன?

28. பங்கு என்றால் என்ன?

29. நிதிநிலை அறிக்கை பகுப்பாய்வின் கருவிகளைப் பட்டியலிடவும்.

30. ஏதேனும் ஐந்து கணக்கியல் அறிக்கைகள் கூறு.

III. எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும் (வினா 40 க்கு கட்டாயமாக விடையளிக்கவும்) (7 x 3 = 21)

31. பின்வரும் தகவல்களிலிருந்து கடன் விற்பனையைகாணவும்:

| விவரம் | ரூ. |
|---|---|
| 2018, ஏப்ரல் 1 அன்று கடனாளிகள் | 1,00,000 |
| கடனாளிகளிடமிருந்து பெற்றரொக்கம் | 2,30,000 |
| அளித்த தள்ளுபடி | 5,000 |
| உள் திருப்பம் | 25,000 |
| 2019, மார்ச் 31 அன்று கடனாளிகள் | 1,20,000 |

32. சென்னை டென்னிஸ் மன்றத்தின் விளையாட்டுப் போட்டிநிதி ஏப்ரல் 1, 2018 அன்று ரூ.24,000 வரவிருப்பு காட்டியது. அந்த ஆண்டில் அந்நிதியிலிருந்து பெற்ற வரவுகள் ரூ26,000. அந்த ஆண்டில் மேற்கொண்ட விளையாட்டுப் போட்டிச் செலவுகள் 3,000. இவ்விவரங்கள் மன்றத்தின் 2019மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய இறுதிக் கணக்குகளில் எவ்வாறு தோன்றும் எனக் காட்டவும்.

33. குமார் என்பவர் ஒரு கூட்டாண்மை நிறுவனத்தின் கூட்டாளி. கூட்டாண்மைஒப்பாவணத்தின்படி எடுப்புகள் மீது வட்டி ஆண்டுக்கு 6% கணக்கிடப்பட வேண்டும். டிசம்பர்31 ஆம் நாளோடு முடிவடையும் 2018 ஆம் ஆண்டில் அவருடைய எடுப்புகள் பின்வருமாறு:

| நாள் | ரூ. |
|---|---|
| மார்ச் 1 | 4,000 |
| ஜுன் 1 | 4,000 |
| செப்டம்பர்1 | 4,000 |
| டிசம்பர்1 | 4,000 |



Scanned with CamScanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

34. பின்வரும் தகவல்களிலிருந்து மூலதனமாக்கல் முறையில் நற்பெயரின் மதிப்பைக் காணவும்.

(அ) சராசரி இலாபம் = ரூ.60,000 (ஆ) சாதாரண இலாபவிகிதம் = 10%

(இ) பயன்படுத்தப்பட்டமுதல் = ரூ.4,50,000

35. சாம் மற்றும் ஜோஸ் என்னும் கூட்டாளிகள் 3:2 என்னும் விகிதத்தில் இலாபம் மற்றும் நட்டங்களைப் பகிர்ந்து வந்தனர். 2018 ஏப்ரல் 1 அன்று ஜோயல் என்பவரை கூட்டாளியாகசேர்த்துக் கொண்டனர். ஜோயல் கூட்டாண்மையில் சேர்ந்தஅன்று நிறுவன ஏடுகளில் நற்பெயர் ரூ.30,000 ஆக இருந்தது. மாறுபடும் முதல் முறையில் கணக்குகள் பராமரிக்கப்படுவதாகக் கருதி கூட்டாளிகளின்பின்வரும் முடிவுகளின் படி குறிப்பேட்டுப் பதிவுகளைத்தரவும்.

(அ) ஏட்டில் உள்ள நற்பெயர் தொகை முழுவதையும் போக்கெழுதுவது

(ஆ) ஏட்டில் உள்ள நற்பெயரில் ரூ.20,000-ஐ போக்கெழுதுவது

36. நதியா ஜவுளி வரையறு நிறுமம் ரூ.10 மதிப்பிலானரூ. 8 அழைக்கப்பட்ட 100 பங்குகளைஒறுப்பிழப்பு செய்தது. இதில் மயூரி பங்கு ஒன்றுக்கு ரூ6 விண்ணப்பம் மற்றும் ஒதுக்கீட்டிற்கானதொகையினைச் செலுத்தி இருந்தார். அவற்றில் 75 பங்குகள் பங்கு ஒன்றிற்கு ரூ7 பெற்றுக் கொண்டு ரூ.8 வீதம் செலுத்தப்பட்ட பங்குகளாகசௌந்தர்யா என்பவருக்கு மறுவெளியீடு செய்யப்பட்டது. ஒறுப்பிழப்பு மற்றும் மறுவெளியீட்டிற்கான குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும்.

37. அர்ஜுன் நிறுமத்திடமிருந்து பெறப்பட்ட பின்வரும் தகவல்களிலிருந்துகணக்குகள் மூலம் செலுத்த வேண்டியவைகளின் சுழற்சி விகிதம் மற்றும் சராசரி கடன் செலுத்தும் காலத்தையும் (நாட்களில்) கணக்கிடவும்.

| விவரம் | ரூ. |
|---|---|
| 2018-2019 ல் கடன் கொள்முதல் | 9,50,000 |
| 1.4.2018 அன்று வணிக கடனீந்தோர் | 60,000 |
| 1.4.2018 அன்று செலுத்தற்குரிய மாற்றுச் சீட்டு | 45,000 |
| 31.3.2019 அன்று வணிக கடனீந்தோர் | 50,000 |
| 31.3.2019 அன்று செலுத்தற்குரிய மாற்றுச் சீட்டு | 35,000 |

38. கூட்டாண்மை ஒப்பாவணம் இல்லாதபோது, இந்திய கூட்டாண்மைச் சட்டம் 1932-ன்படி கடைபிடிக்க வேண்டிய விதிமுறைகள் குறித்து சிறு குறிப்பு தரவும்.

39. தியாக விகிதத்திற்கும், ஆதாய விகிதத்திற்கும் இடையேஉள்ள வேறுபாடுகள் யாவை?

40. Tally.ERP 9-ல் கீழ்க்காண்பனவற்றைப் பார்வையிடுவதற்கான நுழைவாயிலை எழுதுக.

(1) இலாப நட்டக் கணக்கு (2) இருப்புநிலைக் குறிப்பு (3) நாளேடு

IV. அனைத்து வினாக்களுக்கு விடையளிக்கவும். (7 x 5 = 35)

41 (அ) டேவிட் முறையான கணக்கேடுகளைப்பராமரிக்கவில்லை. அவருடைய ஏடுகளிலிருந்து தரப்பட்டுள்ள விவரங்கள் பின்வருமாறு:

| விவரம் | 1.4.2018 | 31.3.2019 |
|---|---|---|
| ரொக்கம் | 43,000 | 29,000 |
| சரக்கிருப்பு | 1,20,000 | 1,30,000 |
| பற்பலகடனாளிகள் | 84,000 | 1,10,000 |
| பற்பலகடனீந்தோர் | 1,05,000 | 1,02,000 |
| கடன் | 25,000 | 20,000 |
| வணிக வளாகம் | 2,50,000 | 2,50,000 |
| அறைகலன் | 33,000 | 45,000 |

அவ்வாண்டில் அவர் கூடுதல் முதலாக ரூ.45,000 கொண்டு வந்தார். தன்னுடைய வியாபாரத்திலிருந்து சொந்தபயனுக்காக ரூ.2,500 ஒவ்வொரு மாதமும் எடுத்துக் கொண்டார். மேற்கண்ட விவரங்களைக் கொண்டு இலாபநட்ட அறிக்கையை தயார் செய்யவும்.

(அல்லது)



Scanned with CamScanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

(ஆ) ஊட்டி மனமகிழ் மன்றத்தின் பின்வரும் பெறுதல்கள்மற்றும் செலுத்தல்கள் கணக்கிலிருந்து 2018 மார்ச் 31 ஆம்நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வருவாய் மற்றும்செலவினக் கணக்கினைத் தயாரிக்கவும்.

| பெறுதல்கள் | ரூ. | செலுத்தல்கள் | ரூ. |
|---|---|---|---|
| தொடக்க இருப்பு கை ரொக்கம் | 5,000 | விளையாட்டுப் பொருள்கள் வாங்கியது | 10,000 |
| வாடகைப் பெற்றது | 10,000 | எழுது பொருளுக்காக செலுத்தியது | 7,000 |
| முதலீடுகள் விற்றது | 8,000 | கணிப்பொறி வாங்கியது | 25,000 |
| சந்தா பெற்றது | 54,000 | சம்பளம் | 20,000 |
| | | இறுதி இருப்பு கை ரொக்கம் | 15,000 |
| | 77,000 | | 77,000 |

42 (அ) வன்பொருள் வியாபாரம் செய்துவரும் அருண் என்பவர் தன்னுடைய ஏடுகளை இரட்டைப்பதிவு முறையில் பராமரிப்பதில்லை. அவருடைய ஏடுகளிலிருந்து பெறப்பட்டதகவல்கள் பின்வருமாறு:

| விவரம் | 31.12.2017 | 31.12.2018 |
|---|---|---|
| நிலம் மற்றும் கட்டடம் | 2,40,000 | 2,40,000 |
| சரக்கிருப்பு | 1,20,000 | 1,70,000 |
| கடனாளிகள் | 40,000 | 51,500 |
| கடனீந்தோர் | 50,000 | 45,000 |
| வங்கி ரொக்கம் | 30,000 | 53,000 |

31.12.2018 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டின் பிற தகவல்கள் பின்வருமாறு:

| | |
|---|---|
| கூலி | 65,000 |
| வெளித் தூக்குக்கூலி | 7,500 |
| பற்பலசெலவுகள் | 28,000 |
| கடனீந்தோருக்கு அளித்தரொக்கம் | 6,00,000 |
| எடுப்புகள் | 10,000 |

அவ்வாண்டுக்குரிய மொத்தவிற்பனை ரூ. 7,70,000. அவ்வாண்டின் கொள்முதல் திருப்பம் ரூ30,000 மற்றும் விற்பனைத் திருப்பம் ரூ 25,000. நிலம் மற்றும் கட்டடங்கள் மீது 5% தேய்மானம்நீக்கவும். ரூ.1,500 – க்கு ஐயக்கடன் ஒதுக்கு உருவாக்கவும். 2018டிசம்பர்31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வியாபார மற்றும் இலாபநட்டக் கணக்கு மற்றும் அந்நாளையஇருப்புநிலைக் குறிப்பு தயாரிக்கவும்.

(அல்லது)

(ஆ) கீழே கொடுக்கப்பட்ட தகவல்களிலிருந்து கோயம்புத்தூர் கிரிக்கெட் மன்றத்தின் 2019மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கைத் தயார் செய்யவும்.

| விவரம் | | ரூ. | விவரம் | ரூ. |
|---|---|---|---|---|
| வங்கி மேல்வரைப் பற்று (1.4.2018) | | 6,000 | கடன் மீதான வட்டி செலுத்தியது | 2,000 |
| கை ரொக்கம் (1.4.2018) | | 1,000 | நீர் மற்றும் மின்சாரக் கட்டணம் | 700 |
| கூலி செலுத்தியது | | 2,000 | விளையாட்டுப் போட்டிச் செலவுகள் | 2,600 |
| சந்தாபெற்றது: முந்தைய ஆண்டு | 500 | | விளையாட்டுப் பொருள்கள் வாங்கியது | 1,900 |
| நடப்பு ஆண்டு | 9,600 | | விளையாட்டுப் போட்டி நிதி வரவுகள் | 5,200 |
| எதிர்வரும் ஆண்டு | 400 | 10,500 | உயில் கொடைப் பெற்றது | 2,000 |
| மதிப்பூதியம் செலுத்தியது | | 2,800 | ரொக்க இருப்பு (31.3.2019) | 300 |
| கூலி கொடுபட வேண்டியது | | 2,200 | நன்கொடை பெற்றது | 2,000 |



Scanned with CamScanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

43. (அ) பின்வரும் தகவல்களிலிருந்து ரூபன் மற்றும் டெரி அவர்களின் முதல்நிலை முதல் எனக் கொண்டு அவர்களின் முதல் கணக்குகளைத் தயாரிக்கவும்.

| விவரம் | ரூபன். | டெரி |
|---|---|---|
| 2018, ஏப்ரல் 1 அன்று முதல் | 70,000 | 50,000 |
| 2018, ஏப்ரல் 1 அன்று நடப்புக் கணக்கு (வ) | 25,000 | 15,000 |
| கூடுதல் முதல் கொண்டு வந்தது | 18,000 | 16,000 |
| 2018 - 2019 - ல் எடுப்புகள் | 10,000 | 6,000 |
| எடுப்புகள் மீது வட்டி | 500 | 300 |
| இலாபப் பங்கு (2018 - 2019) | 35,000 | 25,800 |
| முதல் மீது வட்டி | 3,500 | 2,500 |
| சம்பளம் | – | 18,000 |
| கழிவு | 12,000 | – |

(அல்லது)

(ஆ) வீணா மற்றும் பியர்ல் ஒரு நிறுவனத்தின் கூட்டாளிகள். முறையே 2:1 எனும் விகிதத்தில் இலாபம் பகிர்ந்து வந்தனர். அவர்களின் 2018 மார்ச் 31 ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு பின்வருமாறு:

| பொறுப்புகள் | ரூ. | ரூ. | சொத்துகள் | ரூ. |
|---|---|---|---|---|
| முதல் கணக்குகள்: | | | கட்டடம் | 60,000 |
| வீணா | 60,000 | | இயந்திரம் | 30,000 |
| பியர்ல் | 40,000 | 1,00,000 | கடனாளிகள் | 20,000 |
| காப்பு நிதி | | 30,000 | சரக்கிருப்பு | 10,000 |
| தொழிலாளர் ஈட்டு நிதி | | 10,000 | வங்கி ரொக்கம் | 30,000 |
| பற்பல கடனீந்தோர் | | 10,000 | | |
| | | 1,50,000 | | 1,50,000 |

01-04-2018 அன்று டெரி என்பவர் பின்வரும் நிபந்தனைக்குட்பட்டு கூட்டாளியாகச் சேர்க்கப்பட்டார்.

(i) வீணா, பியர்ல் மற்றும் டெரியின் புதிய இலாபப்பகிர்வு விகிதம் 5:3:2 ஆகும்.

(ii) டெரி ரூ.30,000 முதலாக கொண்டு வரவேண்டும்.

(iii) சரக்கிருப்பின் மதிப்பை 20% குறைக்க வேண்டும்.

(iv) தொழிலாளர் ஈட்டு நிதி மீது எதிர்பார்க்கப்படும் கோருரிமை ரூ1,000.

(v) பதிவுறா முதலீடுகள் ரூ.11,000 ஏடுகளில் கொண்டு வரப்பட வேண்டும்.

(vi) நிறுவனத்தின் நற்பெயர் ரூ.30,000 என மதிப்பிடப்பட்டது.

டெரி தன்னுடைய நற்பெயரின் பங்கினை ரொக்கமாக கொண்டு வந்தார். டெரி நற்பெயராகக் கொண்டு வந்த தொகை முழுவதையும் பழைய கூட்டாளிகள் எடுத்துக் கொண்டனர். தேவையான பேரேட்டு கணக்குகள் மற்றும் சேர்ப்பிற்கு பின் உள்ள இருப்புநிலைக் குறிப்பினை தயார் செய்யவும்.

44. (அ) பின்வரும் விவரங்களைக் கொண்டு ஆண்டுத் தொகை முறையில் நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும். (அ) பயன்படுத்தப்பட்ட முதல் ரூ.50,000 (ஆ) சாதாரண இலாபவிகிதம் 10% (இ) 2016, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளின் இலாபங்கள் முறையே ரூ13,000, ரூ.15,000 மற்றும் ரூ.17,000. (ஈ) 3 ஆண்டுகளில் 10% வட்டி வீதத்தில் ரூ.1 ன் தற்போதைய ஆண்டுத்தொகை மதிப்பு ரூ 2.4868.

(அல்லது)

(ஆ) சுந்தர், விவேக், மற்றும் பாண்டியன் என்ற கூட்டாளிகள் இலாப நட்டங்களை 3 : 2 : 1 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொண்டனர். அவர்களின் 2018, டிசம்பர் 31 ஆம் நாளைய இருப்பு நிலைக் குறிப்பு பின்வருமாறு: 2017, டிசம்பர் 31 ஆம் நாளைய இருப்புநிலைக்குறிப்பு



Scanned with CamScanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

| பொறுப்புகள் | ரூ. | ரூ. | சொத்துகள் | ரூ. |
|---|---|---|---|---|
| முதல் கணக்குகள்: | | | நிலம் | 60,000 |
| சுந்தர் | 50,000 | | சரக்கிருப்பு | 20,000 |
| விவேக் | 40,000 | | கடனாளிகள் | 30,000 |
| பாண்டியன் | 10,000 | 100,000 | வங்கி ரொக்கம் | 14,000 |
| பொதுக் காப்பு | | 36,000 | இலாப நட்டக் கணக்கு (நட்டம்) | 6,000 |
| பற்பல கடனீந்தோர் | | 14,000 | | |
| | | 1,50,000 | | 150,000 |

1.1.2019 அன்று பாண்டியன் இறந்து விட்டார் மற்றும் அவரின் இறப்பின் போது பின்வரும் சரிக்கட்டுதல்கள் செய்யப்பட்டன.

(i) சரக்கிருப்பின் மதிப்பு 10% தேய்மானம் குறைக்கப்படவேண்டும்.

(ii) நிலத்தின் மதிப்பு ரூ.11,000 அதிகரிக்கப்படவேண்டும்.

(iii) கடனாளிகள் மதிப்பு ரூ.3,000 குறைக்க வேண்டும்.

(iv) பாண்டியனுக்கு செலுத்தவேண்டிய இறுதித் தொகை செலுத்தப்படவில்லை.

கூட்டாளியின் இறப்பிற்கு பின் நிறுமத்தின் மறுமதிப்பீட்டுக் கணக்கு கூட்டாளிகள் முதல் கணக்கு மற்றும் இருப்புநிலைக் குறிப்பு தயாரிக்கவும்.

45. (அ) சுதா நிறுமம் ரூ.10 மதிப்புள்ள 1,00,000 பங்குகளைவிண்ணப்பத்தின் போது ரூ.3, ஒதுக்கீட்டின் போது ரூ.4, மீதமுள்ள தொகைதேவையான பொழுது என்ற அடிப்படையில் பொதுமக்களுக்கு வெளியிட்டது. 1,40,000 விண்ணப்பங்கள் பெறப்பட்டன. அவற்றைஇயக்குனர்கள் பின்வருமாறு ஒதுக்கீடு செய்தனர்.

60,000 பங்குகளுக்கான விண்ணப்பதாரர்களுக்கு - முழுமையாக

75,000 பங்குகளுக்கான விண்ணப்பதாரர்களுக்கு - 40,000 பங்குகள் (மிகுதியான விண்ணப்ப பணம் ஒதுக்கீட்டிற்கு பயன்படுத்தப்படும்)

5,000 பங்குகளுக்கான விண்ணப்பதாரர்களுக்கு - எதுவுமில்லை

அனைத்து தொகைகளும் பெறப்பட்டன. ஒதுக்கீட்டுத் தொகை பெறுவது வரையிலான குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும். (அல்லது)

(ஆ) இரட்டைப்பதிவு முறைமற்றும் முழுமை பெறா பதிவேடுகளுக்கும் இடையேஉள்ள வேறுபாடுகள் யாவை? (ஏதேனும் 5)

46. (அ) பின்வரும் விவரங்களைக் கொண்டு பாலை வரையறு நிறுமத்தின் போக்குப்பகுப்பாய்வினைக் கணக்கிடவும்.

| விவரம் | ரூ. இலட்சங்களில் | | |
|---|---|---|---|
| | வருடம் 1 | வருடம் 2 | வருடம் 3 |
| I. பங்குமுலதனம் மற்றும் பொறுப்புகள் | | | |
| பங்குதாரர்நிதி | 250 | 275 | 300 |
| நீண்டகாலப் பொறுப்புகள் | 100 | 125 | 100 |
| நடப்புப் பொறுப்புகள் | 50 | 40 | 80 |
| மொத்தம் | 400 | 440 | 480 |
| II. சொத்துகள் | | | |
| நிலைச் சொத்துகள் | 300 | 360 | 390 |
| நடப்புச் சொத்துகள் | 100 | 80 | 90 |
| மொத்தம் | 400 | 440 | 480 |



Scanned with CamScanner

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

(அல்லது)

ஆ. நவீன் நிறுமத்தின் பின்வரும் வணிக நடவடிக்கைகயிலிருந்து (i) மொத்த இலாப விகிதம் (ii) நிகர இலாப விகிதம் (iii) இயக்க அடக்கவிலை விகிதம் (iv) இயக்க இலாப விகிதம் கணக்கிடவும்.

இலாபநட்டஅறிக்கை

| விவரம் | ரூ. |
|---|---|
| I. விற்பனை மூலம் பெற்ற வருவாய் | 20,000 |
| II. இதர வருமானம்: | |
| முதலீடு மூலம் வருவாய் | 200 |
| III. மொத்த வருவாய் (I,II) | 20,200 |
| IV. செலவுகள்: | |
| கொள்முதல் செய்த சரக்குகள் | 17,000 |
| சரக்கிருப்பு மாற்றம் | (-)1,000 |
| நிதிசார் செலவுகள் | 300 |
| இதர செலவுகள் (நிர்வாகம் மற்றும் விற்பனை) | 2,400 |
| மொத்த செலவுகள் | 18,700 |
| V. அவ்வாண்டிற்கான வரிக்கு முன்னர் உள்ள இலாபம் (III - IV) | 1,500 |

47. (அ) பின்வரும் விவரங்களிலிருந்து தருண் & கோ நிறுமத்தின் ஒப்பீட்டு வருமான அறிக்கை தயார் செய்யவும்.

| விவரம் | 2016-17 | 2017-18 |
|---|---|---|
| விற்பனை மூலம் பெற்றவருவாய் | 2,00,000 | 2,50,000 |
| இதர வருமானங்கள் | 50,000 | 40,000 |
| செலவுகள் | 1,50,000 | 1,20,000 |

(அல்லது)

(ஆ) கணினிமயக் கணக்கியல் முறையின் பயன்பாடுகளில் ஏதேனும் ஐந்தினை விளக்கவும்.



Scanned with CamScanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com